


ஒரு நபரைக் கண்டுபிடித்து இவர் ஹமாஸில் ஒரு முக்கியஸ்தர் என்று விரல் நீட்டிச் சொல்லுவதற்குள் தாவு தீர்ந்துவிடும். இது குறித்து முன்பே பல சமயம் பேசியிருக்கிறோம் என்றாலும், எப்படி ஓர் அமைப்பால் அத்தனை ரகசியம் காக்கமுடிகிறது என்பது எத்தனை முறை பேசினாலும் வியப்பூட்டும் அம்சமே.

குறைந்தது சில ஆயிரம் உறுப்பினர்களும் இருபது மிக முக்கியஸ்தர்களுமாவது அவசியம் இருக்க வேண்டும். ஹமாஸின் தொடக்க காலத்தில், பெயரளவில் வெளியே தெரிந்தவர்கள் நான்கைந்து பேர் மட்டும். புகைப்பட அளவில் தெரிந்தவர்கள் இரண்டு பேர். தகவல் அளவில் தெரிந்தவர் யாசின் ஒருவர் மட்டும்.

ஷேக் அகமது யாசின் குறித்து ஏற்கெனவே பார்த்துவிட்டோம். எனவே, மற்ற சில முக்கியஸ்தர்கள் குறித்து இப்போது.

முதலில் அப்துல் அஜிஸ் அல் ரண்டிஸி. டாக்டர் ரண்டிஸி, நிஜமாகவே ஸ்டெதஸ்கோப் வைத்திருந்த ஒரு டாக்டர். குழந்தைகள் மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு முடித்தவர்.

எப்போது பிறந்தார் என்கிற விவரம் யாருக்கும் தெரியாது. ஜாஃபா அருகே யுப்னா என்கிற இடத்தில் பிறந்தவர் என்பது மட்டும் தெரியும். 1948-ம் ஆண்டு நடைபெற்ற முதல் அரபு - இஸ்ரேலிய யுத்த சமயத்தில், ரண்டிஸியின் குடும்பம் காஸாவுக்கு இடம் பெயர்ந்தது. எகிப்தில் மருத்துவம் படித்து, சிரியாவில் மதக் கல்வி பெற்று 1976-ம் ஆண்டு அவர் காஸாவுக்குத் திரும்பியபோது, டாக்டர் தொழிலையும் பார்க்காமல், மத போதகராகவும் ஆகாமல் புரட்சிக்காரர் ஆகிப்போனார்.

எண்பதுகளின் தொடக்கத்திலிருந்தே புரட்சிகர எண்ணத்துடன் ஏதாவது செய்யவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த ரண்டிஸிக்கு, ஷேக் அகமது யாசினின் தொடர்பும் நட்பும் கிடைத்தபோது, இஸ்ரேலுக்கு எதிராகத் தொடர விரும்பிய யுத்தத்துக்கு ஒரு வடிவம் கிடைத்தது அவருக்கு.

யாசின் ஒரு சக்தி. இதில் சந்தேகமே இல்லை. அன்றைய தேதியில் காஸா பகுதியில் அவர் ஒரு வார்த்தை சொன்னால், ஏன் என்று கேட்காமல் உடனடியாகச் செய்து முடிக்க, அங்கே நூற்றுக்கணக்கானவர்கள் இருந்தார்கள். இதெல்லாம் ஹமாஸ் என்கிற பெயருடன் ஓர் இயக்கமாகச் செயல்பட ஆரம்பிப்பதற்கு வெகு முன்னாலிருந்தே.

யாசின், ரண்டிஸி, அப்துல் ஃபத்தா துகான், முஹம்மது ஷமா, டாக்டர் இப்ராஹிம் அல் யாசூர், ஈஸா அல் நஜ்ஜர், சலா ஷெஹாதே என்று அப்போது சேர்ந்த ஜமாதான் இஸ்லாமிக் காங்கிரஸாக மலர்ந்து பின்னால் ஹமாஸாகப் பரிணாமம் பெற்றது.

மதச்சார்பற்ற யாசிர் அராஃபத் தொடங்கிவைத்த இண்டிஃபாதா என்கிற மக்கள் போராட்டத்தில்,

'அல்லாஹு அக்பரை' இணைத்து காஸாவில் மட்டும் அதை ஒரு மதப் போராட்டமாக அடையாளம் காட்டியவர் ரண்டிஸி. ஹமாஸின் அரசியல் குரு.

பாலஸ்தீன் விடுதலைக்காக ஹமாஸ் மேற்கொண்ட பல போராட்டங்களில், ரண்டிஸி ஏகப்பட்ட முறை கைதாகியிருக்கிறார். கணக்கு வழக்கே கிடையாது. தன் வாழ்நாளில் பெரும்பகுதியை அவர் பகுதி பகுதியாகச் சிறையிலேயே கழித்தவர். என்ன விசேஷம் என்றால், ரண்டிஸி வெளியில் இருப்பதைக் காட்டிலும் சிறையில் இருக்கும்போதுதான், இயக்க வேலைகள் மிகுந்த சுறுசுறுப்புடன் நடக்கும். எங்கிருந்து, யார் மூலம் எப்படி அவர் டைரக்ட் செய்கிறார் என்றே கண்டுபிடிக்க முடியாது. ஆனால் ஒரு நாள் தவறாமல், அவர் இருக்கும் சிறையிலிருந்து ஹமாஸ் வீரர்களுக்குக் கட்டளைகள் காற்று வழியே வந்துகொண்டே இருக்கும்.

இந்தத் தொல்லை தாங்க முடியாமல், 1992 டிசம்பரில் இஸ்ரேல் அரசு ரண்டிஸியை லெபனானுக்கு நாடு கடத்தியது. அவரோடு கூட 416 பாலஸ்தீன் போராளிகளும் தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார்கள். அதனாலென்ன? நாடு கடத்தப்பட்டவர்களின் நாயகனாக ஆகிப்போனார் ரண்டிஸி. பாலஸ்தீனில் இருந்தால் என்ன? லெபனானில் இருந்தால் என்ன? அவரது பணிகள் ஒருபோதும் முடங்கியதில்லை.

ரண்டிஸி ஆயுதம் ஏந்திப் போரிடும் போராளி அல்ல. அரசியல் ரீதியில் ஹமாஸின் கொள்கைகளை, கோட்பாடுகளை வகுத்தளித்த ஓர் அறிவுஜீவி. அவருக்குத் துப்பாக்கி ஏந்தத் தெரியும். ஆனாலும் அவர் பேனாவைத்தான் அதிகம் நம்பினார். இஸ்ரேலுக்குப் பேனா மொழி புரியாது, துப்பாக்கி மொழிதான் புரியும். இருந்தாலும் என்ன செய்ய? பேனா பிடிக்கவும் இங்கே ஓர் ஆள் வேண்டியிருக்கிறதே என்று, ஒரு சமயம் அவர் சொல்லியிருக்கிறார். ரண்டிஸியிடமிருந்து ஓர் அறிக்கை வருகிறதென்றால், அது ஆயிரம் அணு குண்டுகளுக்குச் சமம்.

ரண்டிஸிக்கு எப்படி இஸ்ரேலிய அரசாங்கத்தைப் பிடிக்காதோ, அதே மாதிரி யாசிர் அராஃபத்தையும் அவரது பி.எல்.ஓவையும், பாலஸ்தீன் அத்தாரிடி என்கிற பெயரில், அவர்கள் ஆளத்தொடங்கியதும் அறவே பிடிக்காது. இஸ்ரேலிடமிருந்து பிச்சையாகப் பெற்ற நிலத்தை ஆள்வதா என்று கேட்டவர் அவர். பாலஸ்தீன் அத்தாரிடி பிறந்த பிறகு, ரண்டிஸி இஸ்ரேலுக்குக் கொடுத்த குடைச்சல்களைக் காட்டிலும் அராஃபத்துக்குக் கொடுத்தவை அதிகம். அதனால் தொண்ணூறுகளில் பல சமயம் அராஃபத் அரசாங்கமே அவரைக் கைது செய்து சிறைப்படுத்தியிருக்கிறது!

1993-ல் அவர் லெபனானிலிருந்து பாலஸ்தீனுக்குத் திரும்பினார். அன்று தொடங்கி, வருடம் ஒருமுறையாவது அவர் கைதாகாமல் இருந்ததில்லை. நமது சிறை நண்பர் என்றுதான் யாசிர் அவரை அழைப்பார்.

2004 ஏப்ரலில் யாசினை இஸ்ரேலிய ஏவுகணைகள் கொன்றபோது, ஹமாஸின் அடுத்த தலைவராக அறிவிக்கப்பட்டவர் ரண்டிஸி. ஆனால், நான்கே வாரங்களில் அவரையும் இஸ்ரேல் கொன்றுவிட்டது. உண்மையில் ரண்டிஸியின் மரணம் ஹமாஸுக்கு மிகப்பெரிய இழப்பு. அதன்பிறகுதான் தங்களது ரகசியக்காப்பு விஷயத்தில், இன்னும் தீவிரத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தார்கள்.

ரண்டிஸிக்குப் பிறகு, ஹமாஸின் அரசியல் தலைவராக அடையாளம் காணப்பட்டவர் காலித் மஷால். மேற்குக் கரை ரமல்லா அருகே சில்வாட் என்கிற ஊரில் 1956-ம் ஆண்டு பிறந்தவர் மஷால். அந்தச் சமயம் ரமல்லாவெல்லாம் ஜோர்டனின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பிரதேசம். 1948 யுத்தத்துக்குப் பிறகு, பாலஸ்தீனை ஜோர்டன் கொஞ்சம், எகிப்து கொஞ்சம், இஸ்ரேல் கொஞ்சம் என்று பிரித்துச் சாப்பிட்ட கதையெல்லாம் போன வருஷமே பார்த்திருக்கிறோம், நினைவிருக்கிறதல்லவா?

அந்தக் காலகட்டத்தில், மஷாலின் குடும்பம் பாலஸ்தீனிலிருந்து குவைத்துக்கு இடம் பெயர்ந்தது. 1991 வளைகுடா யுத்தம் வரைக்கும் குவைத்தில்தான் அவர் வசித்தார். குவைத் பல்கலைக்கழகத்தில் இயற்பியல் படித்துத் தேறினார். படிக்கிற காலத்திலேயே பாலஸ்தீன் அரசியலில் ஆர்வம் செலுத்தியவர் மஷால்.

அப்போது, குவைத் பல்கலையில் பி.எல்.ஓ. ஆதரவு கோஷ்டி அதிகம். மஷாலுக்கு, அராஃபத்தின் டாமினேட்டிங் குணாதிசயம் பிடிக்காது. என்ன பெரிதாகச் சாதித்துவிட்டார்? எத்தனையோ பாலஸ்தீன் போராளிகள் அடையாளமின்றி உயிர் வாழ்ந்து, போராடி, செத்துப்போய்க்கொண்டிருக்கிறார்கள். இவர் சும்மா மேடைதோறும் கத்திவிட்டுத் தலைவர் என்று பெயர் வாங்கிக்கொண்டுவிட்டார் என்று பேசுகிற ரகம்.

அங்கே அராஃபத்தின் ஃபத்தா இயக்கத்துக்கு நல்ல செல்வாக்கு இருந்தது. மஷால் தனது கல்லூரி நாட்களில் ஃபத்தாவுக்குப் போட்டியாக 'பாலஸ்தீன் மாணவர்கள் பொதுப்பேரவை' என்றொரு அமைப்பைத் தொடங்கி நடத்தினார்.

குவைத்தின் மீது ஈராக்கின் அதிபர் சதாம் போர் தொடுத்தபோது, மஷால் குவைத்திலிருந்து கிளம்பி ஜோர்டனுக்குப் போனார். அங்கே அவருக்கு ஹமாஸ் தொடர்பு ஏற்பட்டது. இயக்கத்தில் இணைந்து படிப்படியாக முன்னேறி, தலைமை வரிசைக்கு வந்த மிக நீண்ட பத்து வருட காலத்தில், திருமணமும் ஏழு குழந்தைகளும் அவரது தனி வாழ்க்கைச் சம்பவங்கள்.

ஆனால், மஷாலின் பொது வாழ்க்கை கரடுமுரடானது. அதிபயங்கரமானது. எத்தனையோ முறை, எத்தனையோ பேர், எத்தனையோ விதங்களில் அவரைத் தீர்த்துக்கட்ட முயற்சி செய்து தோற்றிருக்கிறார்கள். அல் ஃபத்தா அமைப்பினர், வேறு சில பி.எல்.ஓ இயக்கத்தினர், அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ., இஸ்ரேலிய உளவுத்துறையான மொசாட் என்று அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்களை வரிசைப்படுத்தினால், ஒரு முழு ரிப்போர்ட்டர் இதழுக்கே வரக்கூடும்.

இத்தனைக்கும் அவர் ஆயுதத் தலைவர் அல்ல. அரசியல் தலைவர்தான்.

ஆனால், வெளி உலகத்துக்கு மஷால் என்கிற பெயர் மட்டுமே தெரிந்து, அவர் யார்? ஹமாஸில் என்ன பொறுப்பில் இருக்கிறார்? என்கிற விவரம் தெரியாத நிலையில், அத்தனை எதிரி உளவு நிறுவனங்களும் தங்கள் கொலைப்பட்டியலில் அவரது பெயரையே பெரும்பாலும் முதலிடத்தில் வைத்திருந்தன. ஹமாஸின் ஒவ்வொரு தற்கொலைத் தாக்குதல் நடவடிக்கையின்போதும் மஷாலைக் குறிவைத்துத் தேடுவார்கள். யாராவது மன்னார்சாமியைப் பிடித்துக்கொண்டு போவார்கள். இதுதான் வழக்கம். ஒரு முறை இருமுறை அல்ல. வருஷக் கணக்கில் தண்ணி காட்டியிருக்கிறார் மஷால்.

1997 செப்டம்பரில் மஷாலைக் கொல்ல, மிகப்பெரிய திட்டம் ஒன்றைத் தீட்டியது இஸ்ரேலிய அரசு. அப்போது இஸ்ரேலின் பிரதமராக இருந்தவர் பெஞ்சமின் நெதான்யாஹு. என்ன ஆனாலும் சரி, எத்தனை செலவானாலும் பரவாயில்லை. மஷால், உலகின் எந்த மூலையில் இருந்தாலும் போய்த் தீர்த்துவிட்டுத்தான் மறுகாரியம் என்று மொசாட்டுக்கு உத்தரவிடப்பட்டது.

அவர்கள் அதிகம் அலைய வேண்டிய அவசியமே இல்லை. மஷால் அப்போது ஜோர்டனில்தான் இருந்தார். மனைவி, குழந்தைகளுடன். சமர்த்தாக. சௌக்கியமாக. ஹமாஸின் ஜோர்டனியத் தொடர்புகளைக் கவனித்துக்கொள்வதும், பயிற்சி எடுக்க வரும் ஹமாஸ் வீரர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்து, அவர்களுக்கு அரசியல் பாடங்கள் நடத்துவதும்தான் அவரது பணி. ஜோர்டனில் இயங்கிய ஹமாஸின் பிரிவுக்கு அவர்தான் அப்போது தலைவர். ஹமாஸுக்காக மத்தியக் கிழக்கு நாடுகளுக்கு வெளியே நிதி சேகரிக்கும் முயற்சிகளிலும் அப்போது அவர் ஈடுபட்டிருந்தார்.

மஷாலைக் கொல்லும் உத்தேசமுடன் மொசாட் அனுப்பிய படையில் பத்துப் பேர்

உறுப்பினர்களாக இருந்தார்கள். அத்தனை பேரும் கனடா பாஸ்போர்ட் எடுத்துக்கொண்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மாதிரி ஜோர்டனுக்குள் நுழைந்தார்கள். அந்தப் படையில் இரண்டு டாக்டர்கள் இருந்தார்கள். ஒரு கெமிக்கல் இன்ஜினீயர் இருந்தார். அப்புறம் வழக்கமான உளவாளிகள்.

ஜோர்டன் தலைநகர் அம்மானில் தங்கியிருந்த மஷாலை, அவர்கள் எந்த இடத்தில், எப்படி நெருங்கினார்கள் என்பது குறித்த தகவல் எதுவும் இதுவரை வெளியானதில்லை. அவரது வீட்டிலேயே வைத்துத்தான் கொலை முயற்சி செய்தார்கள் என்றும், ஒரு ஹோட்டல் வராண்டாவில் நடந்துபோகிற வாக்கில் ஊசி குத்திவிட்டார்கள் என்றும் இருவேறு கருத்துகள் இருக்கின்றன. ஆனால், திட்டமிட்டபடி பெயர் தெரியாத ஒரு விஷ ஊசியை, மஷாலுக்குச் செலுத்திவிட்டார்கள் என்பது உண்மை.

கிட்டத்தட்ட மரணத்தின் வெகு அருகில் போனார் மஷால். காப்பாற்றியவர் ஜோர்டன் மன்னர் உசேன்.

ஹமாஸுக்கும் ஜோர்டன் அரசுக்கும் அப்போது நல்ல உறவு இருந்தது. ஜோர்டனில் ஹமாஸின் கிளை, பிரச்னை இல்லாமல் இயங்கவும், பயிற்சிகள் மேற்கொள்ளவும், நிதி திரட்டவும் தாராளமாக இடமளித்திருந்தார்கள். ஆகவே, மஷால் தாக்கப்பட்ட உடனேயே, அவரை மருத்துவமனையில் சேர்த்து விஷ முறிவு மருந்துகள் செலுத்தப்பட்டன.

மன்னர் உசேன் விஷயத்தை அத்துடன் விட்டுவிடுவதாக இல்லை. சர்வதேச மீடியாவைக் கூப்பிட்டுக் காட்டினார். இஸ்ரேல் பிரதமர்தான் இதற்கு உத்தரவிட்டார் என்பதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தார். உளவுக்காரர்களில் இரண்டு பேரை அப்போது ஜோர்டன் காவல் துறை கைது செய்துவிட்டிருந்ததால், உரிய முறையில் விசாரித்து விஷயத்தைக் கறந்திருந்தார்கள்.

உலகம் முழுவதிலுமிருந்து பெஞ்சமின் நெதான்யாஹுவுக்கு நெருக்கடிகள் வர ஆரம்பித்தன. அமெரிக்க அதிபராக இருந்த பில் க்ளிண்டன் மண்டையை உடைத்துக்கொண்டார். சிறந்த முயற்சிதான். மஷால் இறந்திருந்தால் ஹமாஸின் பலத்தில் சரி பாதி போய்விட்டதாக சந்தோஷப்படலாம்தான். ஆனால், இப்படி மாட்டிக்கொண்டுவிட்டதே இஸ்ரேல்?

என்ன செய்வதென்று யோசித்தார்கள். ஒன்றும் செய்வதற்கில்லை என்றுதான் தோன்றியது. கறாராகச் சில நிபந்தனைகள் விதித்தார். அப்போது, இஸ்ரேலிய சிறையில் இருந்த ஹமாஸின் தலைவர் யாசின் உள்ளிட்ட சில முக்கியஸ்தர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று ஜோர்டன் மன்னர் பேரம் பேசினார். விஷயம் பெரிதாகாமல், மானம் மேலும் போகாதிருப்பதற்காக இஸ்ரேல் அரசு உடனடியாக யாசினை விடுதலை செய்துவிட்டது.

உயிர் பிழைத்த மஷால், கொஞ்ச நாள் கத்தாருக்குப் போய் இருந்துவிட்டு சிரியாவுக்குப் போய்விட்டார். டெமஸ்கஸில்தான் இன்று வரை வாசம். சிரியாவின் ஹமாஸ் பிரிவு அவரது கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது.

இன்றைக்கு பாலஸ்தீன் அத்தாரிடியின் பிரதமராக இஸ்மாயில் ஹனியா இருக்கலாம். ஆனால், சிரியாவில் உட்கார்ந்துகொண்டு டைரக்ட் செய்யும் முதல் தலையாக காலீத் மஷால்தான் இருக்கிறார்.